# 1

# இயேசுவைப் பற்றி நாம் எதையும் "அறிய" முடியுமா?

*சிலர் "நாம் உண்மையிலேயே இயேசுவைப்பற்றி எதுவும் 'அறிய' முடியுமா?" என வினவக்கூடும்; "இயேசுவானவரைப் பற்றிய ஒரு விளக்கம் இன்னொரு விளக்கத்தைப் போல செல்லக்கூடியதாக இருப்பதில்லையா?" நம்முடைய வினவுதலை நாம் தெளிவு படுத்துவோமாக. இங்கே நாம் கேட்பதெல்லாம் "இயேசுவைப்பற்றி வரலாற்றிலிருந்து நாம் என்ன அறியமுடியும்?"; "நமக்கு உதவும்படி எப்படிப்பட்ட தகவல்கள் நமக்கு கிடைக்கக் கூடியவைகளாயுள்ளன?"*

## அவரைப் பற்றிய சத்தியம் கண்டுகொள்ளப்பட முடியும்

அவநம்பிக்கையாளர்கள் நாம் *எதையும்* உண்மையில் புரிந்து கொள்ள முடியும் என்பதை மறுக்கிறார்கள், ஏனெனில் "பொருள் அறி மெய்மை" என்று ஒன்று இல்லை என்பதை அவர்கள் நம்புகிறார்கள். துவக்கத்திலிருந்தே இயேசுவானவரைப் பற்றி சிலவற்றை நாம் அறிந்து கொள்ள *முடியும்* என்ற நிலைப்பாட்டோடு நான் துவங்குகிறேன்: அவரைப் *பற்றி* "பொருள் அறிமெய்மை" என்று ஒன்று *இருக்கிறது.*

ஒரு மெய்மையின் பொருள் அறி கண்ணோட்டம் - சில காரியங்கள் உலக அளவில் நிஜமாயும் அறியக்கூடியதாகவும் இருக்கிறது - இவைகள் மூன்று ஆரம்பநிலை குணாதிசயங்களை கொண்டுள்ளன:

*(1) ஒருவருடைய பகுத்தறியும் ஆற்றல் எப்படி இருந்தாலும் சத்தியம் அல்லது மெய்மை என்பது, அப்படியே இருக்கிறது.* வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உண்மையானது உண்மையானதாகவே இருக்கிறது, நீங்களும் நானும் அப்படி நினைத்தாலும் நினைக்காவிட்டாலும், அது அப்படியே இருக்கிறது. உதாரணமாக, ஜுலை 20, 1969ல் நீல் ஆம்ஸ்ட்ராங் என்பவர் நிலாவில் கால்வைத்த முதல் மனிதரானார். நவீன தொழில் நுட்பத்தின் ஆச்சரியமான ஒரு சாதனையாக இந்த சம்பவம் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. பெரும்பாலானோர் இது ஒரு உண்மை சம்பவம் என கருதினாலும், சிலர் இது நடக்கவே இல்லை என்று மறுக்கிறார்கள். 1976 இன் துவக்கத்தில், சில புத்தகங்கள் உண்மையில் இந்த சம்பவமானது ஒரு ஏமாற்று வேலையாக இருந்தது என்று சொல்லத்தொடங்கின. இது ஒரு சதியாலோசனை என்று கூறுபவர்கள், அறிவியல் ரீதியாக எவர் ஒருவரும் நிலவில் நடப்பது சாத்தியமல்ல, முதல் நிலவு நடைப்பயணப் படங்கள் தெளிவான போலியானவைகள், மற்றும் அடுத்து வந்த ஆண்டுகளில் விண்வெளி ஆய்வாளர்களின் உயிரை எடுத்த "விபத்துக்கள்" உண்மையில் முழு உண்மையையும் சொல்லி விடுவதாக அச்சுறுத்தியவர்களை

தீர்த்துக்கட்டுவதற்கான கொலைகளாகவே இருந்தன என கூறுகிறார்கள். ஒத்த கருத்துடைய மக்களின் ஒரு சர்வதேச அமைப்பு, நிலவில் மனிதன் நடந்த அந்த காரியம் அமெரிக்க அரசால் அரங்கேற்றப்பட்ட ஒரு பித்தலாட்டம் என்ற கருத்தை உடையதாக இருக்கிறது.

ஆம்ஸ்ட்ராங் என்பவர் நிலவில் நடந்தாரா, அல்லது இல்லையா என்பதை இங்கே விவாதிப்பது நமது குறிக்கோள் அல்ல. சொல்லப்படும் கருத்து என்னவென்றால், அவர் அதின்மேல் *நடந்திருந்தால்*, பின்னர் - இந்த மக்கள் என்ன சிந்தித்தாலும் அல்லது சொன்னாலும், அது உண்மையாகவே இருக்கிறது. அவர் நிலவின் மேல் நடக்காமல் இருந்திருந்தால், பின்னர் - எஞ்சிய நாம் என்ன சிந்தித்தாலும் - கூறப்பட்ட சம்பவம் ஒருபோதும் நடக்கவில்லை. இது தான் பொருள் அறி ஆய்வு முறை.

(2) *சத்தியம் அல்லது மெய்மை என்பது சான்று அடிப்படையில் உறுதிப்படுத்தப்படுவதாக உள்ளது.* ஏதோ ஒன்று பொருள் அறி உண்மையானதாக இருந்தால், அதை ஆதரிக்கிறவர்கள் அதற்கு அனுகூலமாக சாட்சியங்களை கொடுக்க முடியும். இந்த சாட்சியங்கள், நேரடி காட்சி, ஆழங்கள் அல்லது அது தொடர்பான விவாதங்களாக இருக்கக்கூடும். இந்த சாட்சியங்கள் எல்லாரையும் நம்பவைக்கக்கூடியதாக இருக்கும் என்பது அதின் பொருள் அல்ல. ஆனால் உரிமை கோரப்படுவதை ஆதரிப்பதற்கு எப்போதுமே சாட்சியங்கள் இருந்து கொண்டிருக்கும். ஆம்ஸ்ட்ராங் நிலவில் நடந்தது தொடர்பாக, ஆவனங்கள், புகைப்படங்கள் மற்றும் அந்த திட்டத்தில் பணியாற்றியவர்களின் சாட்சியங்கள் உள்ளன. இயல்பாக, அவர்களுடைய சாட்சியத்தின் நம்பகத்தன்மை பரிசோதிக்கப்பட வேண்டும். அது பரிசோதிக்கப்பட முடியும் என்ற கருத்தே அதின் மெய்மையின் பொருள் அறி கண்ணோட்டத்தை உணர்த்துவதாக உள்ளது.

(3) *எதுவெல்லாம் மெய்மைக்கு உள்ளடங்கியதாக (அல்லது சத்தியம்) முரண்படுகிறதோ அதுவெல்லாம் பொய்யானதாக இருக்கும்.* இரண்டு எதிர்மறை கூற்றுகள் உண்மையானவைகளாக இருக்க முடியாது, குறிப்பாக வரலாற்று உண்மைகளை குறித்து நாம் பேசும்போது அவைகள் உண்மையாக இருக்க முடியாது. ஆம்ஸ்ட்ராங் நிலவில் நடந்திருந்தால், அவர் அப்படி நடக்கவில்லை என்று கூறுவது தவறானதாயிருக்கிறது. அவர் நிலவில் நடக்காமலிருந்திருந்தால், அவர் அப்படிச் செய்தார் என்று உரிமை கோருவது தவறாக இருக்கும். அவர் நடந்தார் மற்றும் அவர் நடக்கவில்லை என்ற இரண்டும் சாத்தியமானது அல்ல.

இப்போது, இவைகள் எல்லாம் இயேசுவைப் பற்றி காரியத்தில் என்ன செய்ய வேண்டியதாயுள்ளது? ஏனென்றால் அப்படிப்பட்ட ஒருவர் இருந்தார் அல்லது இல்லாமல் இருந்தார். ஏனென்றால் சாட்சிய மூலங்கள் அவர் எப்படிப்பட்டவராக இருந்தார் என்று சொல்லுகிறதோ, அவர் அப்படிப்பட்டவராக இருந்தார் அல்லது அவர் அப்படிப்பட்டவராக இருக்கவில்லை. ஒன்றேல், ஆதார மூலங்கள் அவர் என்ன செய்தார் என்று சொல்லுகிறதோ அதை அவர் செய்தார் அல்லது அவர் செய்யவில்லை. இயேசுவானவரைக் குறித்த முரண்பாடான கருத்துக்கள் அனைத்தும் உண்மையானவைகளாக இருக்க முடியாது. வெவ்வேறு கோணங்கள் ஒன்றின்மேல் ஒன்று இணைந்து செல்லக் கூடியதாக இருக்கலாம்; ஆனால் இயேசுவானவரைப் பற்றி எதிர்எதிரான கருத்துக்கள் முன் வைக்கப்படும்போது, அவைகளில் ஒன்று அல்லது அவைகளில் கூடுதலானவைகள்

*தவறாக இருக்கின்றன.*[1]

## அவரைப்பற்றிய வரலாற்று சான்றுகள் ஜாக்கிரதையாக பரிசோதிக்கப்படக்கூடும்

இயேசுவானவரைக் குறித்து நாம் என்ன தெரிந்து கொள்ள முடியுமோ அதை கற்றுக்கொள்வதற்கு நாம் *வரலாற்று ரீதியான* கேள்விகளை கேட்க வேண்டும். நாம் நினைப்பதை அல்லது உணருவதை அல்லது மற்றவர்கள் சொல்ல கேட்பதை திரும்ப திரும்ப கூறமுடியாது. நாம் சான்றுகளைக் கேட்க வேண்டும்.

"ஆனால் சான்றுகளின் ஆதாரமூலங்கள் சோதிக்கப்படவேண்டிய அவசியமில்லையா?" என ஒருவர் வினவலாம். ஆம், சோதிக்கப்படவேண்டும்! நாம் சான்றுகளை பரிசோதிக்க விரும்புகிறோம் மற்றும் பல சந்தர்ப்பங்களில் நாம் அதை பரிசோதிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். உண்மையான சான்று என்னவாக இருக்கிறது என்பதை பார்க்க மறுக்கும் ஒரு விதமான கடவுள் மறுப்பு கொள்கைக்குள் நாம் செல்ல முடியாது. வெறுமனே, "இயேசுவானவரைப் பற்றி நாம் எதையும் அறிந்து கொள்ளமுடியாது" என்று கூற முடியாது. அது அறிவுபூர்வமான நேர்மையின்மை மற்றும் சோம்பேறித்தனமாய் உள்ளது!

சாட்சியங்கள் நம் கேள்விகளுக்கு எப்போதும் குறிப்பாக பதில் அளிக்கின்றனவா? ஒத்துப்போகாமல் இருப்பதற்கு இன்னமும் வாய்ப்பு இருக்கிறதா? இயேசுவானவரைப் பற்றிய வரலாற்று ரீதியான கேள்விகளை கேட்பது அல்லது அவைகளுக்கு விடை தேடுவது, நாம் தெரிந்துகொள்ள விரும்புகிற எல்லாவற்றையும் அல்லது நம்முடைய ஒவ்வொரு கேள்விக்கும் பதில் கூறும் என ஒருவரும் உரிமை கோர இயலாது. அவ்விதமே, வரலாற்று ரீதியான வினவுதல் ஒருபோதும் நம்முடைய எல்லா சந்தேகங்களையும் நீக்கி, உண்மையில் என்ன நடந்ததோ அல்லது என்ன சொல்லப்பட்டதோ, அதற்கு அப்பால் எதையும் உறுதி செய்யாது. ஒரு நேர்மையான வரலாற்று ஆய்வு என்பது நேரிட *சாத்தியமானது* இது என்பதை உறுதி செய்யும் மற்றும் உறுதி செய்யக்கூடும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம்முடைய கேள்விகளுக்கு வரலாற்று ரீதியான பதிலை தேடுவதில் சான்றுகள் *ஒருவேளை* என்ன சம்பவித்தது என்பதை கூறும்படி நாம் எதிர்பார்க்கலாம். இயேசுவானவரைப் பற்றிய காரியத்தில், "இயேசுவானவர் இந்தியா சென்று தியானத்தால் கடவுளை அறியலாம் என்ற கிழக்கத்திய கொள்கையை கற்றுக் கொண்டது சாத்தியமில்லாததாய் இருந்ததா?"; "இயேசுவானவர் திருமணம் செய்து பிள்ளைகளை உடையவராக இருந்தார் என்பது சாத்தியமில்லாததாய் இருந்ததா?" என மக்கள் அடிக்கடி கேட்கின்றனர். ஒரு வரலாற்று கண்ணோக்கில், "சாத்தியமானதாயிருக்கிறது" என்பது நமது பதிலாக இருக்கக்கூடும். ஆனால் உண்மையான கேள்விகள் என்னவென்றால், "இது யாரோ ஒருவருடைய ஊகமான கருத்துக்களாக அல்லது கற்பனையாக இருக்கிறது என்பதைத் தவிர, அவர் இதை செய்தார் என்பதை குறிப்பிடுவதற்கான *சான்று* ஏதாவது இருக்கிறதா?" என்பதே. இல்லை, இல்லை; மற்றும் நிச்சயமாக இல்லை.

மக்களின் வரலாற்று ரீதியான புரிந்துகொள்ளுதல் குறைவாக இருப்பதே இயேசுவைப் பற்றிய அவர்களுடைய தேவையில்லாத கற்பனைகளுக்கு காரணமாயிருக்கிறது. இந்த தொடர்பாடங்கள், நீங்கள் இயேசுவானவரை

பல்வேறு கலாச்சார கண்ணாடிகளின் மூலமாக பார்ப்பதற்கு பதிலாக அல்லது உங்கள் சொந்த எண்ணங்கள் அல்லது உணர்வுகளின் வழியாக பார்ப்பதற்கு பதிலாக, அவரை நீங்கள் ஒரு வரலாற்று கண்ணோக்கில் சிந்திப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

## அவரைப் பற்றிய வேதாகமத்தில் உள்ள வரலாற்று சான்றுகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவைகள்

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், "இந்த கலந்துரையாடலில் *விசுவாசத்தைக்* குறித்து எங்கு கூறப்பட்டது?" என்று ஆச்சரியப்படலாம். அது ஒரு சரியான மற்றும் முக்கியமான கேள்வியாக இருக்கிறது. பல கேள்விகளோடு போராடிக் கொண்டிருந்த விசுவாசி என்ற முறையில், கீழ்வரும் ஆலோசனைகளை முன்வைக்க என்னை அனுமதியுங்கள்:

(1) *விசுவாசம், வரலாற்றைக் கண்டு பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை.* பொருள் அறி மெய்மையை வெளிக்கொண்டுவரும் காரியத்தில், எது உண்மையானது என்பதைப் பற்றி நாம் அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும். உங்களைப் பற்றி எனக்கு தெரியாது, ஆனால் நான் இயேசுவானவரைப் பற்றி தவறான எதையும் - அது எனக்கு கவர்ச்சியாக இருக்கிறது அல்லது ஆறுதலாக இருக்கிறது என்பதற்காக அதை நம்ப விரும்பமாட்டேன். வரலாற்று ரீதியான ஆய்வுகள், நான் பேணிவந்த கருத்துக்கள் தவறானவைகள் என உணர்த்துமானால், அதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். எனது விசுவாசம் ஒரு கற்பனையின் பேரில் அமைவதை விட, நிஜத்தின் பேரில்/சத்தியத்தின்பேரில் அமையும்போது அது, அதிக வலிமையானதாக மற்றும் தூய்மையானதாக மாறுகிறது.

(2) *ஒரு உண்மையான வேதாகம விசுவாசம் வரலாற்றில் வேர் கொண்டுள்ளது.* பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் தன்னை தேவனால் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கொண்டுவரப்பட்ட ஒரு ஜனக்கூட்டமாக அடையாளப்படுத்திக் கொண்டது. அவர்கள் எதை விசுவாசித்தார்களோ, அது ஒரு மக்கள் கூட்டமாக அவர்களுக்கு என்ன நடந்ததோ அதில் வேர் கொண்டிருந்தது. அதே போல், அப்போஸ்தர்கள் இயேசுவை வரலாற்றின் ஒரு காலகட்டத்தில், புவியியல் ரீதியான ஒரு இடத்தில் வாழ்ந்தவராக, மரித்தவராக மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவராக பிரசங்கித்தார்கள் - அவர்கள் இதை ஒரு "சமய புராணக்கதையாகவோ" அல்லது "புனித உணர்வுகளாகவோ" பிரசங்கிக்க வில்லை. ஒரு விசுவாசி என்ன நடந்தது என்பதை அறிய விரும்புகிறவராக மற்றும் தன் விசுவாசம் அதினால் போதிக்கப்பட்டு மற்றும் உறுதிப்படுத்தப்படுவதை அனுமதிக்கிறவராக இருக்க வேண்டும்.

(3) *விசுவாசமும் வரலாறும் ஒன்று கலந்திருப்பதை வேதாகமம்தானே பிரதி நிதித்துவப்படுத்துகிறது.* வேதாகம ஆசிரியர்கள் வெறுமனே, "என்ன நடந்தது என்று கூறவில்லை." அவர்கள் என்ன நடந்தது என்பதை விவரித்தார்கள் மற்றும் அது விசுவாசிகளின் வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தை கொடுத்தது என்பதையும் பிரதிபலித்தார்கள். புதிய ஏற்பாட்டின் சுவிசேஷ புத்தகங்கள் இயேசு என்ன செய்தார் என்று சொல்வதோடு நிற்காமல், நாம் அவரை பின்பற்றும்படியாக நம்மை கட்டாயப்படுத்தும் விதத்தில் அதை சொல்வதையும் எதிர்பார்க்கலாம்.

இதற்காகத்தான் அவைகள் எழுதப்பட்டுள்ளதாக யோவான் சுவிசேஷம் வெளிப்படையாக கூறுகிறது (யோவான் 20:30, 31). இயேசுவைக் குறித்த நமது அறிவார்ந்த தேடுதலில், வரலாறு மற்றும் விசுவாசம் ஆகியவை இணைந்து வருவது பொருத்தமாக இருக்கிறது. ஒரு விதத்தில், இந்த இரண்டையும் இணைத்துப் பார்க்காமல் இருப்பது முடியாதது. "பொருள் அறிமை" வரலாற்று ஆசிரியர்கள் கூட, என்ன நடந்தது என்ற கதையை, அது பற்றிய நமது பார்வையை வடிவமைக்கும்படி கூறுகிறார்கள்.

*(4) எந்த ஒரு சான்றுகளையும் ஏற்றுக்கொள்வது என்பது, ஓரளவில் ஒரு விசுவாசத்தின் செயலாகவே உள்ளது.* ஆதாரங்கள் எங்கிருந்து வருகிறதோ, அதன் மூலங்களை நாம் நம்பவேண்டும் என்று இது அர்த்தப்படுகிறது. உதாரணமாக, ஜூலியஸ் சீசர் என்ற ஒருவர் வாழ்ந்தார் மற்றும் அவர் பண்டைய ரோமாபுரியின் அரசராக இருந்தார் என்பதை நம்மில் ஒரு சிலரே சந்தேகிக்கிறோம். நாம் ஒருபோதும் அவரை சந்தித்திராமல் அல்லது பார்த்திராமல் இருந்தபோதிலும், அவர் தொடர்பான தகவல் அளித்த சில ஆதாரமூலங்களை (பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பாடப்புத்தகங்கள் போன்ற) சுய நினைவுள்ள நிலையிலோ அல்லது இல்லாமலோ மிக சரியானது என்று ஏற்றுக்கொள்ள தீர்மானித்திருக்கிறோம். சில நேரங்களில் வேதாகமத்தின் காரியங்களிலும் இது செய்யப்படுகிறது. இது நாம், வேதாகமம் நம்புவதற்குறியது என தீர்மானிக்கப் போமானால், அது இயேசுவானவரைக் குறித்து சொல்பவைகளை நம்புகிறவர்களாயிருக்கிறோம். மற்றும் வேறு எந்த விதத்திலும் பதில் அளிக்கப்படமுடியாத நம்முடைய சில கேள்விகளுக்கு அதை பதில் அளிக்க நாம் அனுமதிக்கிறவர்களாயிருக்கிறோம். நம்பகமான தகவல் மூலமாக வேதாகமத்தை நாம் ஏற்க மறுப்போமானால், பின்னர் இயேசுவானவரைக் குறித்த வேதாகம போதனைகளை நாம் சந்தேகிக்கிறவர்களாக இருப்போம் மற்றும் அவர் யாராக இருந்தார் மற்றும் என்ன செய்தார் என்பது பற்றி பிற கருத்தோட்டங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருப்போம். *நேரிடக்கூடிய தன்மை* பற்றி கேள்விகள் கேட்க நினைவாயிருங்கள். அடுத்த பாடத்தில், வேதாகமம் இயேசுவானவரைப் பற்றி நாம் அறிந்துகொள்ள ஒரு வரலாற்று ரீதியான நம்பகமான தகவல் மூலம் என்பதை பார்ப்போம்.

இயேசுவானவரைக் குறித்து எதையும் நிச்சயமாக அறிந்துகொள்ள, தேவையான கேள்விகளுக்கு பதில் தெரிந்து கொள்ள, அடிப்படைக் கேள்விகளை கேட்பதற்கு இந்த அழைப்பை தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் என்னோடு நிலைத்திருந்து, சான்றுகள் எங்கே வழிநடத்துகிறது என்று காணுங்கள்.

---

குறிப்பு

[1]உண்மைத்தன்மையின் பாரமட்சமற்ற கண்ணோட்டத்தைப்பற்றி இன்னும் அதிகமாக கீழ்கண்டவற்றில் கூறப்பட்டுள்ளது. Norman L. Geisler, "Why I Believe Truth Is Real and Knowable" in H. L. Geisler and P. K. Hoffman, eds., *Why I Am a Christian: Leading Thinkers Explain Why They Believe,* rev. and exp. ed. (Grand Rapids, Mich.: Baker Books, 2006), 33-52.